பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
17 03 2024 6 45
ஞாயிற்றுக்கிழமை காலை

## தலைப்புச் செய்திகள்

1. பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி ஆந்திரப்பிரதேசமாநிலத்தில் இன்று தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்ற உள்ளார்.

2. காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி இன்று மும்பையில் **Indi** கூட்டணி சார்பில் நடைபெற உள்ள தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்ற உள்ளார்.

3. தேர்தல் நடத்தை விதிமுறைகளை கண்டிப்புடன் அமல்படுத்துமாறு மாநில அரசு நிர்வாகங்களை தேர்தல் ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது.

4. தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்ததையடுத்து, தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் கண்காணிப்பு மற்றும் வாகன சோதனை தொடங்கியுள்ளது.

5. ப்ரீமியர் லீக் மகளிர் கிரிக்கெட் இறுதி ஆட்டத்தில் தில்லி அணி – பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

*------ இனி விரிவான செய்திகள் --*

<<<< >>>>

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி ஆந்திரப்பிரதேசமாநிலத்தில் இன்று தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்ற உள்ளார்.

**Palnadu** மாவட்டம் **Shilakaluripet** என்ற இடத்தில் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஏற்பாடு செய்துள்ள இந்தக் கூட்டத்தில் அம்மாநிலத்தில் பிஜேபி கூட்டணிக் கட்சியான தெலுங்கு தேச கட்சியின் தலைவர் திரு. சந்திரபாபு நாயுடு, ஜனசேனா கட்சித் தலைவர் திரு. பவன் கல்யாண் ஆகியோரும் கலந்துகொள்கிறார்கள்.

மக்களவைத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் ஆந்திர மாநிலத்தில் நடைபெறும் முதலாவது தேர்தல் பிரச்சாரக் கூட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

10 ஆண்டுகளுக்குப் பிறகு பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் தெலுங்கு தேசம் மீண்டும் இணைந்துள்ளது.

மக்களவைத் தேர்தலில் பிஜேபி, தெலுங்குதேசம், ஜனசேனா ஆகிய கட்சிகளுக்கிடையே நீண்ட பேச்சுவார்த்தைக்குப் பின்னர் தொகுதிப் பங்கீடு இறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பிஜேபி 6 மக்களவைத் தொகுதி மற்றும் 10 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும், தெலுங்குதேசம் 17 மக்களவைத் தொகுதிகளிலும், 144 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் போட்டியிடுவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டணியில் உள்ள ஜனசேனா கட்சிக்கு 2 மக்களவைத் தொகுதிகளும், 21 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் ஒதுக்கப்பட்டுள்ளன.

<<<< >>>>

காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி நடத்தி வரும் பாரத ஒற்றுமை நீதி யாத்திரை இன்று மும்பையில் நிறைவடைகிறது.

இதையொட்டி **Indi** கூட்டணி சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பொதுக்கூட்டத்தில் காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன் கார்கே, சமாஜ்வாதி கட்சித் தலைவர் திரு. அகிலேஷ் யாதவ், ராஷ்ட்ரிய ஜனதாதள தலைவர் திரு. தேஜஸ்வி யாதவ், திமுக தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் உள்ளிட்டோர் கலந்துகொண்டு உரையாற்ற உள்ளனர்.

முன்னதாக நேற்று திரு. ராகுல் காந்தியும், காங்கிரஸ் பொதுச் செயலாளர் திருமதி பிரியங்கா காந்தியும் மும்பையில் தமிழர்கள் அதிகமாக வசிக்கக்கூடிய தாராவி உட்பட பல்வேறு இடங்களில் திறந்த வாகனத்தில் சென்று பிரச்சாரம் செய்தனர்.

<<<< >>>>

தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்ததையடுத்து, தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் கண்காணிப்பு மற்றும் வாகன சோதனை தொடங்கியுள்ளது.

முறையான ஆவணங்களுடன் பணம் மற்றும் பொருட்களை கொண்டு செல்லும் வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் அச்சப்படத் தேவையில்லை என்று மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. சத்யபிரதா சாஹூ கூறியுள்ளார்.

வாகன சோதனை நடைபெறும் இடங்களில் சோதனையை முழுமையாக வீடியோ பதிவு செய்யுமாறும், கண்காணிப்புக் குழுக்களுக்கு தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

<<<< >>>>

மதுரை மாவட்டம் முழுவதும் மக்களவைத் தேர்தலுக்கான ஆயத்தப் பணிகள் தொடங்கியுள்ளதாக மாவட்ட தேர்தல் அதிகாரி திருமதி சங்கீதா தெரிவித்துள்ளார்.

மதுரையில் நேற்று வாக்களார் விழிப்புணர்வு கையெழுத்து இயக்க மலரை வெளியிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வியாபாரிகளிடம் பறக்கும் படையினர் பறிமுதல் செய்யும் பணத்திற்கு உரிய ஆவணங்களை அளித்தால் அவற்றை திரும்ப ஒப்படைக்க தனிக் குழு அமைக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

மாவட்டத்தில் ஒரு சட்டமன்ற தொகுதிக்கு தலா 3 பறக்கும் படையினர் மற்றும் நிலையான கண்காணிப்பு படையினர், ஒரு வீடியோ

குழு அமைக்கப்பட்டுள்ளது என்றும், இவர்கள் சுழற்சி முறையில் 24 மணி நேரமும் பணியாற்றுவார்கள் என்றும் அவர் கூறினார்.

<<<< >>>>

தேர்தல் நடத்தை விதிமுறைகளை கண்டிப்புடன் அமல்படுத்துமாறு மாநில அரசு நிர்வாகங்களை தேர்தல் ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது.

இதுதொடர்பாக தேர்தல் ஆணையம் மத்திய அரசின் அமைச்சரவைத் செயலர், மாநில மற்றும் யூனியன்பிரதேச தலைமைச் செயலாளர்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

மக்களவைத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் 24 மணி நேரத்திற்குள் அரசு சுவர்கள் மற்றும் கட்டிடங்களில் எழுதப்பட்டுள்ள சுவர் எழுத்துக்கள் மற்றும் சுவரொட்டிகளை உடனடியாக அகற்றுமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

ரயில் நிலையங்கள், பேருந்து நிலையங்கள் போன்ற இடங்களில் எழுதப்பட்டுள்ள அரசியல் கட்சிகளின் சுவர் எழுத்துகளையும், அரசின் சாதனை குறித்த விளம்பரங்கள் இருந்தால் அவற்றையும் அகற்றுமாறு ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

<<<< >>>>

திருவள்ளூர் மாவட்டத்தில் தேர்தல் நடத்தை விதிமீறல்கள் தொடர்பாக வரும் புகார்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்ட தேர்தல் அதிகாரி திரு. பிரபுசங்கர் தெரிவித்துள்ளார்.

மக்களவைத் தேர்தல் அறிவிக்கப்பட்டதை அடுத்து நேற்று திருவள்ளூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாவட்டத்தில் 281 வாக்குச்சாவடிகள் பதற்றமானவை என்று கூறினார்.

தேர்தல் நன்னடத்தை விதிகளை அமல்படுத்துவதற்காக மாவட்டம் முழுவதும் 90 பறக்கும் படைக் குழுக்களும் 90 நிலை கண்காணிப்புக் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

தேர்தல் நடத்தை விதிமீறல்கள் தொடர்பாக எந்தவொரு நபரும் தேர்தல் ஆணையத்தால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள **C Vigil** கைபேசி செயலி மூலமாக புகார் அளிக்கலாம் என்றும், அதன் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

<<<< >>>>

உறுதியான நீதித்துறைக்கு நீதிபதிகள் மட்டுமல்ல வழக்கறிஞர்களும் முக்கிய தேவை என்று சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி சதீஷ்குமார் தெரிவித்துள்ளார்.

நீலகிரி மாவட்டம் உதகையில் புதிதாக கட்டப்பட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தை நேற்று திறந்து வைத்துப் பேசிய

அவர், இந்தப் புதிய நீதிமன்றத்தில் செய்யப்பட்டுள்ள வசதிகளை வழக்கறிஞர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

நீலகிரி மாவட்டத்தில் மாவட்ட நிர்வாகமும், நீதித்துறையும், காவல்துறையும், சிறப்பாக பணியாற்றி வருவதால் குற்றங்களின் சதவீதம் குறைவாக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

<<<< >>>>

மக்களவைத் தேர்தலை முன்னிட்டு தேர்தல் நடத்தை விதிமுறைகளை அமல்படுத்துவது தொடர்பாக கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மாவட்ட தேர்தல் அதிகாரி திரு. ஷ்ரவண் குமார் அனைத்து துறை அதிகாரிகளுடன் நேற்று ஆலோசனை நடத்தினார்.

தேர்தல் தொடர்பாக ஏதேனும் புகார் இருந்தால் மாவட்ட தேர்தல் கட்டுப்பாட்டு மையம் அல்லது மாவட்ட நிர்வாகத்தின் கவனத்திற்கு கொண்டு வருமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

மாவட்டத்தில் தேர்தல் தொடர்பான அனைத்துப் பணிகளையும் ஒருங்கிணைந்து மேற்கொண்டு தேர்தல் நியாயமாகவும், சுதந்திரமாகவும் நடைபெறுவதை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அதிகாரிகளை அவர் கேட்டுக்கொண்டார்.

<<<< >>>>

சென்னை கடற்கரை – தாம்பரம் இடையே இயக்கப்படும் புறநகர் மின்சார ரயில் சேவை இன்று காலை 10 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரை ரத்து செய்யப்பட்டுள்ளது.

கோடம்பாக்கம் - தாம்பரம் ரயில் நிலையங்களுக்கு இடையே பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளதால் ரயில்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதாக தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

எனவே பயணிகளின் வசதிக்காக சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகம் இன்று காலை 10 மணி முதல் மாலை 3.30 மணி வரை தாம்பரம், கிண்டி, தியாகராய நகர், சென்ட்ரல், கடற்கரை வரை உள்ள வழித்தடத்தில் வழக்கமாக இயக்கப்படும் பேருந்துகளுடன் கூடுதலாக 150 பேருந்துகள் இயக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல் இன்று காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை 7 நிமிட இடைவெளியில் மெட்ரோ ரயில்கள் கூடுதலாக இயக்கப்படும் என்று சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.

<<<< >>>>

*இருவரிச் செய்திகள்*

ரஷ்யாவின் சில பகுதிகள் மீது யுக்ரைன் தாக்குதல் நடத்தியதை அடுத்து அந்தப் பகுதியில் பள்ளி கல்லூரிகள் மற்றும் வணிக வளாகங்கள் மூடப்பட்டுள்ளன.

------------

வெளிநாடுகளில் உள்ள இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மருத்துவர்கள் மனித குலத்திற்கு அர்ப்பணிப்பு மிக்க பணியை ஆற்றி வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

------------

இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பூடான் பிரதமர் திரு. **Dasho Tshering Tobgay** நேற்று மும்பையில் மாநில ஆளுநர் திரு. **Ramesh Bais**-ஐ சந்தித்துப் பேசினார்.

------------

ஹரியானா மாநிலம் ரேவரியில் நேற்று ஒரு ஆலையில் உள்ள கொதிகலன் வெடித்ததில் 40க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் காயமடைந்தனர்.

------------

ஜம்மு-கஷ்மீரில் பூஞ்ச் மாவட்டத்தில் இந்திய எல்லைக்குட்பட்ட பகுதியில் நேற்று நள்ளிரவு ட்ரோன் தென்பட்டதை அடுத்து அந்தப் பகுதியில் எல்லைப் பாதுகாப்புப் படையினர் கண்காணிப்பை தீவிரப்படுத்தியுள்ளனர்.

------------

நீலகிரி மாவட்டம் குன்னூரில் வண்டிச்சோலை வனப்பகுதியில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீயை அணைக்கும் பணியில் வனத்துறையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

------------

நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டதை அடுத்து திண்டுக்கல் மாவட்டம் பழனியில் பறக்கும்படையினர் நேற்று சாலைகளில் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர்.

------------

மக்களவைத் தேர்தல் ஏற்பாடுகள் குறித்து காஞ்சிபுரம் மாவட்ட தேர்தல் அதிகாரி திருமதி கலைச்செல்வி மோகன் நேற்று அனைத்து துறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

ப்ரீமியர் லீக் மகளிர் கிரிக்கெட் இறுதி ஆட்டத்தில் தில்லி அணி – பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

இந்தப் போட்டி இன்றிரவு 7.30 மணிக்கு தில்லியில் தொடங்குகிறது.

----------------

புதுதில்லியில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இன்று இந்தியாவின் ராம்குமார் ராமநாதன், சகநாட்டு வீரரான **Karan Singh**-ஐ எதிர்கொள்கிறார்.

-------------

ஆல் இங்கிலாந்து பேட்மிட்டன் சாம்பியன் போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவு அரை இறுதியில் இந்தியாவின் லக்ஷயா சென் தோல்வியடைந்தார்.

நேற்று நடைபெற்ற இப்போட்டியில் லக்ஷயா சென், 12-21, 21-10, 15-21 என்ற செட் கணக்கில் இந்தோனேஷியாவின் ஜோனதன் கிறிஸ்டியிடம் தோல்வியடைந்தார்.

முன்னதாக இந்தோனேஷியாவின் நட்சத்திர வீரர் ஆண்டனி ஜின்டிங் - பிரான்ஸ் வீரர் கிறிஸ்டோ பாபோவை வென்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

**<<<<The End>>>>**